RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/ rjt22465

# கோவை மாவட்ட சிறுதெய்வ வழிபாட்டில் பலியிடுதல் சடங்கு

ப. காளீஸ்வரமூர்த்தி [அ, *], இரா. வீரபத்திரன் [அ]

[அ] தமிழ்த்துறை, கற்பகம் உயர்கல்விக் கழகம், கோவை-21. தமிழ்நாடு, இந்தியா

# Sacrifice Ritual in Coimbatore district Idol Worship

**P. Kaleeswaramoorthy [a, *], R. Veerapathiran [a]**

[a] Department of Tamil, Karpagam academy of higher Education, Coimbatore- 21, Tamilnadu, India

* Corresponding Author:
kaleeswaramoorthy@gmail.com

Received: 25-07-2022
Revised: 12-09-2022
Accepted: 19-09-2022
Published: 09-10-2022

Check for updates

**ABSTRACT**

During the pre-Hungarian period, man depended on animal meat to meet his food needs. In such a society, powerful clan leaders used to fight wild animals and kill them and share their meat with their clansmen. During such hunting, the tradition of worshiping the hero who died after hunting the animal as a deity developed. Each time they offered a portion (a portion of the meat) of the animal caught in the hunt to the deity. This resulted in the tradition of sacrificing animals to the deity. This sacrificial tradition, which is still practiced today, has shrunk to a great extent due to Vedic influence. This science examines how the origin of this tradition of sacrifice changes due to the influence of other religions in social development.

**Keywords:** Tamil People, Deity, Tradition, Social development

## முன்னுரை

இயற்கையோடு இயைந்த வாழ்வினை மேற்கொண்டு வந்த ஆதிமனிதன் கால வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாக அடுத்தடுத்த சூழலுக்குத் தள்ளப்பட்டு சமூக மற்றும் குழு வாழ்வினை மேற்கொள்ளும் நிலைக்கு மாற்றம் அடைந்தது. உணவுத் தேவைக்காக தாவரங்களையும், விலங்குகளையும் சார்ந்து வாழத் தள்ளப்பட்டான். முதல் நிலையில் தாவரங்களைச் சார்ந்து வாழ்ந்த காலகட்டத்தில் இயற்கையினால் ஏற்பட்ட பருவமாற்றங்களின் காரணத்தால் போதிய உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய இயலாமல் விலங்குகளின் இறைச்சியைச் சார்ந்து உணவுத் தேவையயைப் பூர்த்திசெய்ய முன்வந்தான். அத்தகைய சமூகத்தில் வலிமையான இனக்குழுத் தலைவர்கள் காட்டு விலங்குகளை எதிர்த்துப் போராடி அவற்றைக் கொன்று அதன் இறைச்சியைத் தன்னுடைய இனக்குழுவினரோடு தானும் பகிர்ந்து உண்டு வந்தனர். இத்தகைய வேட்டையாடுதலின் போது விலங்கை வேட்டையாடித் தானும் இறந்த வீரனைத் தெய்வமாக வழிபடும் மரபு உருவாயிற்று. ஒவ்வொரு முறை வேட்டையில் கிடைக்கும் விலங்கின் ஒரு பகுதியைத் (இறைச்சியின் ஒரு பகுதி) தெய்வத்திற்குப் படைத்து வழிபட்டனர். இதன் தொடர்ச்சியாக விலங்குகளைத் தெய்வத்திற்குப் பலியிடும் மரபு தோன்றியது.

## பலியிடல்

பலியிடுதல் பழஞ்சமுதாயத்தில் தெய்வத்தை அமைதிப்படுத்தக் கையாண்ட வழிபாட்டு முறையாகும். 'உயிர்ப்பலி முறையே தொடக்ககால மக்கட் சமுதாயத்திடையே தெய்வத்தின் சீற்றம் போக்கக் கையாண்ட வழிபாட்டு முறை என்பதை மானிடவியலார் உணர்த்தியுள்ளனர்' (Gandhi, 1980).

பலியிடலின் துவக்க நிலை என்னவெனில் தனிமனிதனாக நாடோடி வாழ்வினை மேற்கொண்டு இயற்கையிடம் கிடைத்த பழங்கள் கிழங்குகளை புசித்து வந்த ஆதிமனிதன் பருவ மாற்றங்களில் ஏற்பட்ட உணவுப் பற்றாக் குறையைப் போக்கிக்கொள்ள விலங்குகளைப் போன்று உணவு தேடி வாழவும் சண்டையிட்டு பிற விலங்களைக் கொன்று அதன் மாமிசங்களைப் பச்சையாக உண்டும் வாழ்ந்து வந்தான். நாகரீக நிலைக்குத் தள்ளப்பட்ட மனிதன் சிந்தித்து வாழத்தலைப்பட்ட காலத்தில் நெருப்பின் உதவியோடு தீயில் சுட்டு மாமிசங்களை உண்டும் சேகரித்து பதப்படுத்தி வாழவும் கற்றுக்கொண்டான்.

ஆதிமனிதன், காட்டாடிண்டி நிலை, விலங்காண்டி நிலை, நாகரீக நிலை என்ற படிம நிலைகளில் அடுத்தடுத்த காலகட்டங்களை நோக்கி வாழத்தலைப்பட்டான். இத்தகைய காலகட்டங்களில் மனித நாகரீகத்தின் தொடக்கநிலை பின்பற்றப்பட்டு வந்த முதல்நிலை வாழ்வியல் கூறுகளை தகர்த்தெரியும் நோக்கில் பிற சமய ஊடுருவல்கள் பழமரபுத் தரவுகளையும் வழிபாடுகளையும் அழிக்க முற்பட்டு வருகின்றன. எவ்வகையில் அவற்றை மீட்டுருவாக்கம் செய்ய இயலும் என்பதை சிறுதெய்வத் தோற்றம் மற்றும் வழிபாட்டில் தரவுகளின் அடிப்படையில் கூறப்படுகிறது.

வேட்டைச் சமூகத்தின் எச்சங்களாகவே பலியிடுதல் பற்றி தரவுகள் எடுத்துரைக்கப்படுகிறது. முதல் நிலையில் தனிமனிதனாக வாழ்ந்து வந்தான். பின்னர் காட்டு விலங்குகளைப் போன்று தனக்கென ஒரு துணையைத் தேடிக்கொண்டு கூட்டம் கூட்டமாக வாழ முற்பட்டான். இத்தகைய கூட்டு வாழ்க்கை முயற்சியில் ஈடுபட்ட பின்னரே தனக்காகவும் தன்னைச்சார்ந்துவாழும் துணை மற்றும் குழு மக்களுக்காகவும் உணவு சேகரிக்கும் பணியில் ஆண்கள் முதன்மையிடம் பெற்றவர்களாகத் திகழ்ந்தார்கள். அதன் தொடர்ச்சியாகவே வேட்டையில் அதிகளவில் ஆண்கள் ஈடுபட்டனர். உணவு சேகரிக்கும் பணியில் ஈடுபட்ட பொழுது வேட்டையில் உயிர்நீத்த வீரனையும் தெய்வமாக்கி வேட்டையில் கிடைத்த விலங்குகளை அதற்குப் பலியிடலாகினான். அதன் பின்னர் தன்னுடைய குழுவிற்காக வாழ்ந்து இறந்தவர்களைத் தெய்வமாகப் போற்றத் தொடங்கினான். வேட்டையில் கிடைத்த மாமிசங்களைத் தங்களுடைய வேட்டைத் தெய்வத்தின் முன் வைத்து தங்களுடைய இனக்குழுமக்களின் தேவைக்கேற்ப பிரித்துக்கொண்டனர். இத்தகைய முறையினைக் கிராமப்பகுதிகளில் காணப்படும் முனியப்பன், சூரமடை அய்யன், கருப்பராயன், வேட்டைக்காரன் போன்ற தெய்வ வழிபாட்டுத்தலங்களில் கண்டறியலாம். இத்தெய்வ வழிபாட்டில் ஆண்டிற்கு ஒருமுறை அல்லது மூன்று, ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை விழா நடைபெறும் பொழுது விழாவின் முந்தைய நாள் இரவில் அந்தக் கோவிலல் வழிபாட்டில் ஈடுபடும் (தலைமைப் பொறுப்பில் வகிப்போர்) நபர்மீது தெய்வம் இறங்கி ஒரு கையில் தீப்பந்தமும், மறுகையில் அறிவாளும் ஏந்திக்கொண்டு கோவிலை அடுத்துள்ள காட்டுப் பகுதிக்குத் தெய்வம் இறங்கிய நபர் வேட்டைக்குச் செல்வார். அப்படிச் செல்லும் போது யாரும் குறுக்கே செல்லக்கூடாது என்றும் அப்படி குறுக்கே சென்றால் தெய்வம் அவரைக் கொன்றுவிடும் என்று தகவலாளர் தங்கள் பகுதியில் நிலவும் கருத்துக்களை முன்வைத்தனர். வேட்டைக்குச் சென்று மறுநாள் அதிகாலையில் வரும்பொழுது ஏதேனும் ஒரு விலங்கினை, வேட்டையாடி அதன் மாமிசத்தை கோவிலில் மேற்குறிப்பிட்ட தெய்வ வழிபாட்டுத் தலங்களில் கொண்டு வந்து தெய்வத்தின் முன்வைத்து அதனைத் தூய்மைப்படுத்தி பங்கிட்டு மாமிசமாகவோ அல்லது உணவாக சமைத்தோ பரிமாறுவார்கள். இந்த நிலையில் வளர்ச்சி நிலையாகவே தற்கால சிறுதெய்வ வழிபாட்டில் இரத்த பலியிடுதலைக் குறிப்பிடலாம்.

## இரத்தப் பலியிடுதல்

சங்க இலக்கியத்தில் மறிப்பலி வெறியாட்டு என்ற நிலையில் சுட்டிக்காட்டப்படுகிறது. சங்க இலக்கித்தின் குறிஞ்சி நிலப் பாடல்களின் மூலம் அறியலாம். சினம்கொண்ட (கோபமுற்ற நிலையில்) உள்ள தெய்வத்திற்கு மறியைப் பலியிட்டுச் சினத்தைத் தணிப்பதற்காகவோ அல்லது பலியின் மூலம் பிற உயிர்களின் சக்தியினைப் பெறமுடியும் என்ற நிலையிலோ இத்தகைய வழிபாட்டுமுறை இடம்பெற்றிருக்க இயலும் என்று கருதலாம். பலியிடுதல் தெய்வங்களின் சீற்றத்தைப் போக்க

ஏற்படுத்தப்பட்ட வினைகளின் வழியாகக் கருதமுடியும் என்பதை கீழ்கண்ட அகநானூற்றுப் பாடல் எடுத்து இயம்புகிறது.

'முதுவாய்ப் பெண்டிர் அதுவாய் கூறக்

களம்நன் இழைத்துக் கண்ணி சூட்டி

வளநகர் சிலம்பப்பாடிப் பலிகொடுத்து

முருகாற்றுப் படுத்த உருகெழு நடுநாள்' (Balasubramaniyan, 2004)

இங்கு மறிப்பலியொடு அதன் குருதியை திணையொடு விரவி மடை கொடுத்த நிலை சுட்டத்தக்கது. மேற்குறித்த கருத்துக்களை வைத்துப் பார்க்கும் போது தெய்வங்களுக்குப் பலியிடுதல் சங்ககாலம் முதல் நடைபெற்று வருவதை உணரமுடிகின்றது.

சங்க இலக்கியங்களில் ஒன்றான பத்துப்பாட்டு நூல்களில் முதமையிடம் பெற்றுள்ள திருமுருகாற்றுப்படையில் மலைமீதுள்ள முருகன் கோவிலில் வழிபாடு செய்யும் போது மறி அறுத்து அதன் இரத்தத்தை கோவிலைச் சுற்றிலும் தெளித்து வழிபாடு நடைபெறும் என்பதை நக்கீரர் திருமுருகாற்றுப்படை பழமுதிர்ச்சோலையின் சிறப்புக்கள் என்ற பகுதியில் சுட்டிக்காட்டியுள்ளார்.

'சிறுதினை மலரொடு விரைவி மறிஅறுத்து

வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ

ஊர்ஊர் கொண்டசீர் கெழு விழவினும்

ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்

வேலன் தைஇய வெறிஅயர் களனும்'

குறமகளின் வெறியாட்டு நடைபெறும் பொழுது மறிஅறுத்து மலையில் கிடைக்கும் தினை அரிசியை தெய்வத்தின் முன் பரப்பி அதன் மீது ஆட்டுக்கிடாயின் இரத்தத்தைத் தெளித்து குறமகளின் வெறியாடல் நடைபெற்றுள்ளதென்பதை நக்கீரர் எடுத்துரைக்கிறார்.

## காடுறை தெய்வங்கள்

காடுறை தெய்வங்கள் என்று போற்றப்படுபவையே முதன்மைத் தெய்வங்கலெனலாம். ஏனெனில் உணவுத்தேடல் வழித்தோன்றி இயற்கையின் அச்சவுணர்வினால் இரண்டாம் நிலையான இயற்கையையும், முதல் நிலையில் கிடைத்த வேட்டை விலங்கின் கொம்புகள் வலிமையான கற்கள், மரக்குச்சிகள் அவற்றின் வளர்ச்சிக் காலகட்டங்களில் தோன்றிய அரிவாள், ஈட்டி, சூலம், கத்தி போன்ற இரும்புப் பொருட்களும் வேட்டைப் பணியின் எச்சங்களாகவும் வழிபாட்டில் முதன்மையிடம் பெறுவதாகவும் போற்றப்பட்டன. இதனையே தற்கால காடுறை அல்லது சிறுதெய்வ வழிபாட்டில் காணமுடிகிறது.

சிறுதெய்வங்களின் தோற்றம் எங்கெங்கு காணப்படுமென்பதை திருமுருகாற்றுப்படை எடுத்து இயம்புகிறது.

'காடும் காவும் கவின் பெறு துருத்தியும்

யாறும் குளனும் வேறுபல் வைப்பும்

சதுக்கமும் சந்தியம் புதுப்பூங்கடம்பும்

மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்'

காட்டுப் பகுதியிலும் வழிப்பாதையிலும் மரங்களின் கீழ்ப்பகுதியிலும், ஆற்றுப்பகுதிகள், குளத்தின் ஏரிகள், வேறுபல இடங்களிலும் முக்கிய வழிப்பாதைகளிலும் முச்சந்தி, நாற்சதுங்களிலும் கடம்ப

மரத்தன் கீழும் இத்தெய்வத்தை வைத்து வழிபடும் முறையானது சங்ககாலமான கி.பி. இரண்டாம் நூற்றாண்டு காலகட்டத்தலேயே கடைப்பிடிக்கப்பட்டுள்ளதென்பதை இப்பாடல்களின் வழி உணரலாம்.

## கோவை வட்டார சிறுதெய்வங்களும் பலியிடலும்

கோவை வட்டார ஆய்வுப் பகுதியில் சிறுதெய்வங்கள் ஆண் மற்றும் பெண் தெய்வங்கள் உள்ளன. இவற்றில் பெண் ஆய்வங்கள் குறைந்த அளவில் மட்டுமே காணப்படுகிறது. பண்ணாரி மாரியம்மன், பத்ரகாளியம்மன், பொன்னுகிரியம்மன், பொங்களம்மன், கன்னிமார்கள் போன்ற தெய்வக்கோயில்களில் அதிகளவு இரத்தபலி வழிபாடு பின்பற்றப்படுவதில்லை. திருவிழாக்காலங்களில் பெண் தெய்வங்களுக்கு கரகம் பாவித்து அல்லது கம்பம் நடுதல் என்ற சடங்கும் நடைபெறும். இச்சங்குகளின் போது கரகம் வழிபாடு முடிந்தவுடன் கரகம் ஆற்றில் விடப்படும். ஆற்று நீர் இல்லாத ஊர்களில் அருகில் உள்ள கோவில் கிணற்றில் நீரினை நிரப்பி அந்த நீரினுள் கரகம் விடுதல் நடைபெறும்.

மாரியம்மன், மாகாளியம்மன், பத்ரகாளியம்மன் போன்ற தெய்வங்களில் ஒருசில வழிபாட்டுத்தலங்களில் மட்டும் ஆட்டுக்கிடாயினை பலியிட்டு இரத்தபலி பழிபாடு நடைபெறும். இவ்வழிபாடு விழாமுடியும் தருணத்தில் கம்பம் எடுத்துச் செல்லும் சடங்கின் பொழுதும் ஆட்டுக்கிடா பலியிடப்படுகின்றது. 'இவ்வாறு பலியிடப்படுவதால் தெய்வத்தின் சினம் தணியும் என்பதனாலும், அதனால் மக்களைத் தெய்வம் தண்டிக்காது' என்றும் மக்கள் நம்பிக்கை கொண்டு இவ்வழக்கத்தினை மேற்கொண்டு வருகிறார்கள் (தகவலாளர், நஞ்சக்குட்டி, வயது.63, ஊர் : பூரண்டாபாளையம்)(5).

ஆண் தெய்வங்களை கால வரிசைப்படி பிரித்தறிய வேண்டுமெனில் இவ்வாறு பகுத்துக்கூற இயலும். புழங்கு பொருட்கள், காடுறை தெய்வங்கள், சிறு தெய்வங்கள் (ஊர்த்தெய்வங்கள்), பெருந்தெய்வங்கள் இங்கு ஆண்தெய்வங்கள் அதிகளவில் காவல் தெய்வங்களாகக் காணப்படுகின்றன. கிராமப்புறப்பகுதியில் உள்ள கிணற்று மேடுகள் விவசாய நிலங்கள், மேய்ச்சல் நிலப்பகுதிகள், மரங்களின் கீழ்பகுதிகள், வேளாண்மை நிலப்பகுதியில் உள்ள தென்மேற்குப் பகுதி (மூலையில்) கருப்பராயன், முனியப்பன், தொட்டித்தான், காடுறை செய்வம், கருப்பண்ணன், சூரமடை அய்யன், குகை ஆண்டவர் (குகை அய்யன்), செல்லிக்காட்டு அப்பிச்சி, கக்குமலை ஆண்டவர், பால்குடி சாமி, தன்னாசியப்பன், பட்டத்து அய்யன், அண்ணன் தம்பி கோவில், சின்ன அண்ணன், பெரிய அண்ணன் கோவில், வாழைத்தோட்டத்து அய்யன், அய்யாவு கோவில், மாதேஸ்வரன் கோவில் உள்ளன. இங்கு காணப்படும் அனைத்து தெய்வக் கோவில்களிலும் வேட்டைச் சமூகத்தின் தொடர்பினை எடுத்துரைக்கும் வகையில் இரத்தபலி வழிபாடு பிறசமய ஊடுருவல்களுக்கு முன்புவரை பயன்பாட்டில் இருந்து வந்துள்ளது. வைதீக தாக்கத்தினாலும் பிற சமயங்களின் ஆதிக்கத்தாலும் ஒரு சில பண்பாட்டுமுறை அழிந்து போயின என்றே கூறலாம். மேற்குறிப்பிட்ட ஆண் தெய்வம் கோவில்களில் ஒருசில தெய்வங்கள் பெருந்தெய்வங்களுடன் தொடர்பு படுத்தப்பட்டு வழிபாட்டில் மாற்றம் செய்துவிட்டனர். நாகரீக வளர்ச்சி என்ற பெயரில் பிறசமயவாதிகள் பழங்கால மக்களின் தொன்மக் கதைகளையும் பண்பாட்டு பரவல்களையும் மறைமுகமாக தகர்த்து வருகின்றனர். இதனை சிறுதெய்வ வழிபாட்டில் நாம் கண்டறியலாம்.

ஆண் தெய்வங்களுக்கு ஆட்டுக்கிடா பலியிட்டாலும், கருப்பணசாமி கோயில்கள் உள்ள ஊர்களில் திருவிழாவின் போது முழுமையான கருப்பு நிறமுடைய ஆட்டுக்கிடாயையே கருப்பணசாமி என்கிற (கருப்பராயனுக்கு) பலியிடுவார்கள். அதுமட்டுமல்லாது கருமுகப்பன்றி, கருங்கோழி போன்றன பலியிடப்படுகின்றன. இத்தகைய வழிபாட்டு முறையானது கோவை மாவட்டம் அன்னூர் தாலுக்கா நாரணாபுரம் ஊராட்சிக்கு உட்பட்ட பொத்தியாம்பாளையம் எனும் ஊரில் உள்ள ஊர்க்காவல் தெய்வமான கருப்பராயன் தெய்வத்திற்கு வருடம் ஒருமுறை வைகாசி மாதத்தில் உள்ள செவ்வாய்கிழமைகளில் ஆட்டுக்கிடாய் (மதிய உச்சிபூசை) பலியிட்டு வழிபாடு நடைபெறும். திருவிழாவாக 5 ஆண்டுகள், 7 ஆண்டுகள், 9 ஆண்களுக்கு என்று ஒற்றைபடையில் வரும் ஆண்டுகளில் வைகாசி மாதம் திருவிழா நடைபெறும். அத்திருவிழாவின் முந்தையநாள் தெற்கு எல்லைப்பகுதியில் (தென்மேற்கு) கருப்பு நிறமுடைய ஆட்டுக்கிடாயும், வடமேற்கு முச்சந்திப்பகுதியில்

கரும்பன்றியைக் குத்தி (ஈட்டியால்) அதனை முச்சந்தயில் புதைத்து விடுவர். பின்னர் அன்று இரவு ஊரைச்சுற்றி வரும்பொழுது (தீய சக்திகளை அகற்றும் வகையில்) கருமை நிறமுடைய சேவல்கள் பலியிடப்படும். கோவிலின் வலப்பகுதியில் தொடங்கி ஊரைச்சுற்றி வரும் வரை இரத்தச் சோறு கொடுத்தல் என்னும் சடங்கு நடைபெறும். தெய்வத்திற்கு பலியிட்ட கருப்புநிற ஆட்டுக்கிடா, பன்றியின் இரத்தம், கோழியின் இரத்தம் ஆகியவற்றை சோற்றுடன் கலந்து பூசாரியின் துணையுடன் பச்சைமண் சட்டியில் வைத்து ஊரைச்சுற்றிலும் வானில் எறிந்து பூசை கொடுப்பார்கள். இப்படி வழிபாடு செய்து பலிச்சோறு கொடுப்பதன் மூலம் தீய சக்திகளுக்கு உணவளித்து அவற்றினை சாந்தப்படுத்தி அவைகளின் எதிர்வினைகளை பாதுகாக்கும் நோக்கிலும் தீய சக்திகளை அகற்றும் வகையிலும் மக்களுக்கு நன்மை ஏற்படும் வகையிலும் இத்தகைய வழிபாடு நடைபெறுகிறது.

## இரத்த சோறு கொடுத்தல்

இரத்த சோறு கொடுத்தல் என்னும் சடங்கு ஆய்வுப் பகுதியில் இரவு பன்னிரெண்டு மணிக்கு மேல் நடைபெறுகின்றது. காலையில் தெய்வத்திற்காகப் படைக்கப்பட்ட படைப்புகளையும், பலியிடப்பட்ட கருங்கிடாய், கரும்பன்றி, கருங்கோழி ஆகியவற்றின் இரத்தத்தையும் மண்சட்டியில் சோற்றுடன் கலந்து மண் சட்டியில் வைத்துக் கொள்கிறார்கள். அதன் பின்னர் விழாவின் முந்தையநாள் இரவில் தீய சக்திகளை அகற்றும் விதமாக நள்ளிரவில் கொட்டு மேளத்துடன் பூசாரிக்கு அருள் இறக்கப்படுகின்றது. பூசாரி அருளோடு இரத்தச் சோறுள்ள சட்டியை கையில் தூக்கிக்கொண்டு ஊர்ப்பகுதிக்குச் செல்கிறார். ஊரின் எல்லைப் பகுதிக்குச் சென்ற பின்னர் பன்றி குத்தப்பட்ட முச்சந்திக்குச் சென்று வழிபாடு செய்த பின்பு அங்கிருந்து பெண்கள், சிறுமியர் (குழந்தைகளை) அனுப்பிவிட்டு அதன்பின்னர் கொட்டுமேளம் கொட்ட பூசாரிக்கு பாதுகாப்பு தரும் வகையில் 8 முளம் வேட்டி (பேச்சு வழக்கு) இரண்டினை கயிறு போன்று சுருட்டி (திரித்து) இடது பகுதியிலிருந்து வலது தோள்பட்டை வழியாகவும் வலது கைப்பகுதியிலிருந்து இடது தோள்பட்டை வழியாகவும் கயிறு போன்று போட்டு வலிமையாக உள்ள நான்கு பேர் அந்த வேட்டியின் நுனிப்பகுதியை வலிமையாக பிடித்துக்கொள்வார்கள். பூசாரிக்கு அருள்வந்து தனது கையில் உள்ள பானையில் இருக்கும் இரத்தம் கலந்த சோற்றினை ஊரைச்சுற்றி உள்ள காட்டுப்பகுதியில் வரும்போது வானை நோக்கி ஒவ்வொரு கையாக வீசிவருவார். இவ்வாறு வரும்போது கோழியினைக் கொன்று வானை நோக்கி மேல்நோக்கி வீசப்படும். இந்த இரத்த சோற்றினையும் கோழிகளின் மாமிசங்களையும் கீழே விழாமல் ஆவிகள் (முனிகள்) உட்கொள்கின்றன என மக்கள் கருதுகின்றனர். இவ்வழிபாட்டு முறையினை 'முனி முடுக்குதல்' என்று கூறுவார்கள். முனிக்கு பலிச்சோறு கொடுத்து திரும்பிய பின் பூசாரி காலையில் தெய்வத்திற்கு தீபாரதனை காட்டுவார். இதன் பிறகு பூசாரி உட்பட்ட சாமியாடிகளும் படையல் போட்டு வழிபட்ட படைப்பு உணவே உண்ணகின்றார்கள்' (தகவலாளர், ரகுபதி, வயது.62, பொத்தியாம்பாளையம்) பூசாரி இப்படையல் உணவினை உண்ட பின்னரே அன்றைய உண்ணாவிரதத்தை முடிக்கின்றார். இவ்வாறு முனிக்கப் பலிச்சோறு கொடுக்கவில்லையென்றால் முனி மக்கள் மீது கோபம் கொண்டு அவர்களைத் தண்டித்துவிடும் என்று மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

ஆய்வுப் பகுதிக்குட்பட்ட பகுதியில் திருவிழாக்காலங்களில் கோவிலின் முன்பகுதியில் பலியிடப்படும் ஆட்டுக்கிடாயினை மட்டும் அப்பகுதியில் வசிக்கும் குயவர், பண்டாரம் (பூசாரி), நாவிதர், வண்ணார் போன்ற மக்களுக்கு பிரித்துக் கொடுக்கப்படும். குயவர் கரகம் பாலிக்க கும்பம் தயாரித்துக் கொடுப்பதாலும், பண்டாரம் கோவிலில் பூசைப்பணியில் ஈடுபடுவதாலும், வண்ணார், நாவிதர் இன மக்கள் விழாக்களின்போது இதர பிற பணிகளுக்கு உதவுவதாலும் இவர்களுக்கு பலியிடப்படும் விலங்குகள் பிரித்துத் தரப்படுகின்றன.

## சங்ககால வழிபாட்டில் பலியிடல்

பலியிட்டுத் தெய்வத்தை வழிபடுவது சங்ககாலம் தொட்டு நடைபெற்று வந்த நிகழ்ச்சியாகும். போர்க்களத்தில் வீரர்கள் வெற்றியடைந்தவுடன் தங்களுடைய போர்க்களத் தெய்வமான கொற்றவைக்குப் பலியிட்டு வழிபாடு செய்தனர். 'ஒரு தாய் தான் வழிபட்ட முருகனுக்கு

ஆட்டுக்குட்டியினை பலியிட்ட செய்தி நற்றிணையிலும்' (நற்றிணை, பா.49:9-10)(7) 'கொற்றவைக்கு ஒரு வீரன் பசுவைக் கொன்று பலியூட்டிய செய்தி அகநானூற்றிலும் சுட்டப்படுகின்றது' (8) (அகம்., பா.309:4-6).

கலிங்கத்துப் பரணியில் வீரன் ஒருவன் காளிக்கு தன்தலையை அறுத்தல் பலி கொடுத்தான் என்பதைக் கீழ்க்கண்ட பாடலின் மூலம் அறியலாம்.

'அடிக் கழுத்தினுடன் சிரத்தை அரிவரலோ

அரிந்த சிரம் அணங்கின் கைக் கொடுப்பரலோ

கொடுத்த சிரம் கொற்றவையைப் பரவுமாலோ

குறையுடலம் கும்பிட்டு நிற்கு மாலோ' (Rasamaanikkanar, 2011)

என்ற பாடலின் வழி அவிப்பலியும் அக்காலத்தில் இருந்தது என்பதை அறியமுடிகின்றது.

## முடிவுரை

பலியிடுதல் என்னும் நேர்த்திக் கடனில் ஆட்டுக்கிடாய் (வெள்ளாடு) மற்றும் சேவல் ஆகிய உயிரினங்களையே மக்கள் தெய்வங்களுக்குப் பலியிடுகின்றனர். பலியிடும் விலங்குகள் கோவிலின் முன்புறம் அல்லது தெய்வத்தின் எதிர்திசையில் நிறுத்தப்பட்டு அவற்றிற்குச் சந்தனம், குங்குமம், மாலை ஆகியவை கொண்டு அலங்கரிக்கப்பட்டபின் பூசாரி தீர்த்தம் தெளிப்பார். அப்பொழுது விலங்குகள் (சிலிர்த்தல்) துலுக்கியவுடன் தெய்வம் உத்தரவு கொடுத்ததாக நினைத்து அவ்விலங்குகளின் தலைவெட்டுப்பட்டு பலியிடப்படும். சில ஊர்களில் ஆட்டுக்கிடாய் பலியிடப்படும்பொழுது வேல் எடுத்து காணிக்கை செலுத்துகின்றனர். இதனை 'வேல்கிடாய் எடுத்தல்' என மக்கள் அழைக்கின்றனர். ஆய்வுப்பகுதியில் அனைத்து வழிபாட்டுத் தலங்களிலும் வேல்கிடாய் எடுத்து நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர்.

## References


Balasubramaniyan, K.V. (2004) Agananooru, New Century Book House, Chennai, India.

Gandhi, K. (1980) Tamilar Palakavalakangalum Nambikaikalum, International Institute of Tamil, Chennai, India

Rasamaanikkanar, M. (2011) Kaliththogai, Poombukar Publication, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License